## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# பதவி வெற்றிடம்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே நிறுவனமாகும். மேலும் இலங்கையில் தனியார் துறைக்கான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும்.

**பொது முகாமையாளர் HM 2-1 (பிரதான செயற்பாட்டு அதிகாரி) - 01 வெற்றிடம்**
**GENERAL MANAGER HM 2.1 – (CHIEF OPERATING OFFICER)**

**தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வியாபார நிர்வாகம், வர்த்தகம் போன்ற துறைகள் தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டம் அல்லது இந்தப் பதவியுடன் தொடர்புடைய பாடத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
   **மற்றும்**
   மேற்கூறிய துறைக்கு இயைபாகப் பெற்றுக்கொண்ட பட்டப்பின்படிப்பு (Masters) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் மேற்கூறிய விடயத் துறையில் அங்கத்துவம்
   **மற்றும்**
   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் சிறந்த சாதனைப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவம் உட்பட முகாமைத்துவ மட்டத்தில் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
   **அல்லது**
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வியாபார நிர்வாகம், வர்த்தகம் போன்ற துறைகள் தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டம் அல்லது இந்தப் பதவியுடன் தொடர்புடைய பாடத்துறையில் வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
   **மற்றும்**
   மேற்கூறிய துறைகளுக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
   **மற்றும்**
   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 03 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** ரூபா 114,560/-, 3,375/- x 12 – 155,060/-
(மாதச் சம்பளம் ஏறக்குறைய 238,436.00 ரூபாவாக இருக்கும்)

**வயதெல்லை:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சகல விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கை பிரஜைகளாகவிருக்க வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாதாந்த வருகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு, பாவிக்கப்படாத விடுமுறையை பணமாக்குதல், வருடாந்த போனஸ் கொடுப்பனவு, நலன்புரி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் ஊழியர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் மருத்துவக் காப்புறுதி மற்றும் அரச சுற்றுநிருபத்திற்கு அமைவான வகையில் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு உட்பட கவர்ச்சிகரமான பல நன்மைகள் உரித்தாகும்.

விண்ணப்பதாரர்களால் பூர்த்தி செய்யப்பட்ட சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தில் வயது, தகைமைகள், பயிற்சி, சேவை அனுபவம், தற்போதைய பதவி, சம்பளம் மற்றும் சம்பள அளவு போன்ற முன்னைய தகவல்கள் மற்றும் முன்னைய தொழில் வழங்குநருடன் இணைந்த மற்றும் விலகிய திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு தேசிய அடையாள அட்டையின் பிரதி, சான்றிதழ்களின் பிரதி மற்றும் உறவினரல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் அனுப்ப வேண்டும். குறித்த சான்றிழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

அரச / அரச கூட்டுத்தாபனம் / நியதிகள் சபையில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளான 2026-07-20ஆம் திகதி அல்லது அதற்கு முன் சகல விண்ணப்பதாரர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய அனைத்துத் தகைமைகளையும் முறையாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
2. சகல விண்ணப்பதாரர்களும் நன்னடத்தையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
3. விண்ணப்பப் படிவத்தில் வழங்கியுள்ள சகல தகவல்களும் சரியானவை மற்றும் முழுமையானவை என விண்ணப்பதாரரினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.
4. மேற்கூறிய நடைமுறைக்கு புறம்பாக அனுப்பப்படும் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம்.
5. அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்விற்கு விண்ணப்பதாரர் தோற்ற வேண்டும்.
6. இந்த அறிவித்தலில் உள்ளக்கப்படாத ஏதேனும் விடயங்கள் அல்லது ஆட்சேர்ப்பு செயற்பாட்டின் போது எழும் ஏதேனும் சிக்கல்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும். மேலும் பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

சகல விண்ணப்பங்களும் 2026-07-20ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியச", 16ஆம் தளம்,**
**41, கிருள வீதி, நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**
**தொலைபேசி: 0112 320356-9**